தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

06.02.2013 A.M

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 33.45 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 33.45 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 62 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 9,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## திருந்திய நெல் சாகுபடி பண்ணைப் பள்ளி முகாம்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் அருகே உள்ள கிழுமத்தூர் கிராமத்தில், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை மற்றும் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் திருந்திய நெல் சாகுபடி குறித்த பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

கிழுமத்தூர் ஊராட்சித் தலைவர் ரேவதி செந்தில்குமார் தலைமை வகித்தார்.

அறிவியல் மைய ஆய்வகத் தொழில் நுட்பவியலர் ந. சதீஷ்குமார், பண்ணைப் பள்ளிக்கு தேர்வு செய்யப்பட்ட வயலில் 25 விவசாயிகளுக்கு மண் மற்றும் தண்ணீர் மாதிரி எடுப்பது குறித்த செயல் விளக்கமும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கினார். மேலும், உயிரி உரங்களை எவ்வாறு நிலத்தில் இட வேண்டும் என்பது குறித்தும் விளக்கினார்.

நிகழ்ச்சியில் வேப்பூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் வீ. சந்திரசேகரன், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ரா. பிரதீபா, வட்டாரத் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆர். அதிரூபன், என். முத்தழகன், வேப்பூர் உதவி வேளாண் அலுவலர் து. அய்யாசாமி மற்றும் கிழுமத்தூர் விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை அறிவியல் மைய வேளாண் விரிவாக்கத் தொழில்நுட்ப வல்லுநர் ஆர் வசந்தகுமார் செய்தார்.

## கேள்விக்குறியாகும் கும்பப்பூ சாகுபடி

அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருவதையடுத்து, கும்பப்பூ சாகுபடி கேள்விக் குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து, விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். குடிநீர்த் தட்டுபாடு ஏற்படும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் தொடர்ந்து வறண்ட நிலை நீடித்து வருகிறது. பேச்சிப்பாறை அணையில் 4.55 அடி தண்ணீரும், பெருஞ்சாணியில் 32.25 அடி தண்ணீரும் உள்ளன. மாவட்டத்தில் இயல்பான 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில், நிகழாண்டில் 8 ஆயிரம் ஹெக்டரில் மட்டும் நெற்பயிர் சாகுபடி நடைபெற்றுள்ளது. தற்போது அணைகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தி கும்பப்பூ சாகுபடியில் உள்ள நெற்பயிர்களைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது பேச்சிப்பாறையில் இருந்து விநாடிக்கு 281 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையிலிருந்த 123 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டுள்ளன.

அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் கால்வாய்களின் கடைவரம்பு பகுதிகளுக்கு வந்து சேரவில்லை என்றும் இதனால் கடைவரம்பு பகுதிகளில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் கருகும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

அதுபோல் குளத்து பாசனத்தை நம்பி பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் 70 சதவிகிதம் அறுவடைக்கு வரும் எனவும், கால்வாய் பாசனத்தை நம்பி சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகும் அபாயம் நிலையில் உள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடுக்கரை பகுதியில் கதிர் வந்த நிலையில் சுமார் 300 ஏக்கர் நிலங்களில் பயிர்கள் தண்ணீரின்றி வாடி வருகின்றன. குளங்களில் தேங்கி உள்ள தண்ணீரை விவசாயிகள் டீசல் மோட்டார் மூலம் தண்ணீரை உறிஞ்சி நெற்பயிர்களை காப்பாற்றி வருகின்றனர்.

இந்தப் பகுதிகளுக்கு வாரத்துக்கு 3 நாள்கள் தண்ணீர் கிடைத்தால்தான் தற்போதுள்ள நெற்பயிரை காப்பாற்ற முடியும் என்கின்றனர் விவசாயிகள்.

கடந்த கன்னிப்பூ சாகுபடியில் கடைவரம்பு பகுதிகளில் உள்ள நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகின. தற்போது கால்வாய் மற்றும் குளங்களில் தண்ணீர் இல்லாததால் நிலத்தடி நீர் ஊற்றும் குறைந்து வருகின்றது.

அஞ்சுகிராமம், காணிமடம், அழகப்பபுரம் உள்ளிட்ட இடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில பகுதிகளில் கடல்நீர் உள்புகுந்துள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே நாகர்கோவில் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்துவரும் முக்கடல் அணையின் நீர்மட்டம் மைனஸ் 16.20 அடியாக குறைந்துள்ளது.

இதனால் நாகர்கோவில் நகரில் 10 நாள்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

அணைத் தண்ணீர் அனந்தனாறு கால்வாயில் திறந்து விடப்பட்டு, அங்கிருந்து மின்மோட்டார் மூலம் தண்ணீர் உறிஞ்சப்பட்டு நாகர்கோவிலுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பேச்சிப்பாறை அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் தண்ணீர் சேமிக்கும் பரப்பளவு குறைந்து விட்டதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே, அணையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரி பராமரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

## காற்றில் மாசு அளவை குறைத்த மழை

தில்லியில் இரு தினங்களாகப் பெய்யும் கனமழை காரணமாக காற்றில் மாசின் அளவு குறைந்துள்ளது.

தலைநகரின் வெளி மண்டலத்தில் உள்ள காற்றின் தரம் குறித்து புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் புணேயைச் சேர்ந்த இந்திய வெப்ப மண்டல வானிலை ஆய்வு நிறுவனம் (ஐ.ஐ.டி.எம்.) ஆய்வு செய்து வருகிறது.

இந்த நிறுவன ஆய்வின்படி, தில்லியில் காற்றில் தீமை விளைவிக்கக் கூடிய நுண்ணிய துகள்கள், அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் தற்போது இருப்பதாக தெரியவந்துள்ளது.

"சில தினங்களுக்கு முன்புவரையில் ஒரு கன மீட்டர் காற்றில் 200 மைக்ரோ கிராம் அளவுக்கு இந்த நுண் துகள்கள் (பி.எம்.) இருந்தன. தற்போது, 60 மைக்ரோகிராம் அளவுக்கு குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த இரு வாரங்களாக, அந்த நுண்ணிய துகள்களின் அளவு குறைந்துள்ளது. முன்னதாக, இந்த அளவு 250 மைக்ரோ கிராம் கூட இருந்தது குறிப்பிடத்தக்கது.

நுண்ணிய துகள்கள் அதிகம் நிறைந்த காற்றை சுவாசிக்கும்போது அவை நுரையீரலுக்குள் சென்று ரத்தத்தில் கலந்து கடுமையான சுவாசக் கோளாறை ஏற்படுத்தும்.

தட்பவெப்ப நிலையில்  ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் மழை காரணமாக, இரு மாதங்களுக்குப் பிறகு தில்லியில் காற்றில் மாசு குறைந்துள்ளது. மாசு குறைந்துள்ள காற்றை தில்லிவாசிகள்

அடுத்த மூன்று தினங்களுக்கு சுவாசிக்கலாம்' என்று ஐ.ஐ.டி.எம். விஞ்ஞானி குஃப்ரன் பீக் தெரிவித்தார்.

இது தொடர்பான புள்ளிவிவரங்கள், "காற்றுத் தர முன்னறிவிப்பு, ஆய்வு அமைப்புமுறை' (எஸ்ஏஎஃப்ஏஆர்) மூலம் பெறப்பட்டுள்ளது. தில்லியின் காற்று மண்டலத்தை ஆராயும் பகுதிகளில் எட்டு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆராயப்பட்டன.

இது குறித்து எஸ்.ஏ.எஃப்.ஏ.ஆர். நிர்வாகி (பொறுப்பு) சுனில் பெஷின் கூறுகையில், "கடந்த நவம்பரில் தில்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. வானிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றம், வைக்கோல் எரிக்கப்பட்டதிலிருந்து வெளியேறும் புகை ஆகியவை காரணமாக காற்று மாசு அடைந்தது.

தற்போது, வானிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் கூட காற்றில் நுண்ணிய துகள்கள் அளவை கணிசமாகக் குறைய உதவியுள்ளது' என்றார்.

சில மாதங்களாகப் பனி, குளிரின் தாக்கத்தில் தில்லி மக்கள் தவித்து வந்தனர். தற்போது பனியின் தாக்கம் குறைந்து வருகிறது. இந்நிலையில், இரு தினங்களாக பெய்த மழையால் நிலத்தடி நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

## வங்கிகள் மூலம் ரூ. 2,994 கோடி கடன் வழங்க நபார்டு திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அடுத்த நிதியாண்டில் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத வகையில் வங்கிகள் மூலம் ரூ. 2,994 கோடி கடன் வழங்க நபார்டு திட்டமிட்டுள்ளது.

அதன்படி வரும் 2013-2014-ம் நிதி ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத தொழில்களுக்கென எந்த அளவுக்கு கடன் வழங்கலாம் என்பதற்கான சாத்தியம் குறித்த திட்ட அறிக்கையை நபார்டு காஞ்சிபுரம் மாவட்ட வளர்ச்சி அதிகாரி

ஜெயஸ்ரீ அண்மையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெளியிட்டார். அந்த திட்ட அறிக்கையை மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் பெற்றுக் கொண்டார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தனியார் வங்கிகள், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு அர்பன் வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் என மொத்தம் 593 வங்கிக் கிளைகள் செயல்படுகின்றன.

ஒவ்வொரு நிதியாண்டுத் தொடக்கத்துக்கு முன்பும் நபார்டு (வேளாண் மற்றும் கிராப்புற வளர்ச்சி தேசிய வங்கி) தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத தொழில்களுக்கென எந்த அளவுக்கு கடன் வழக்க சாத்தியங்கள் உள்ளன என்பது குறித்து திட்டமிடும். இது குறித்து திட்ட அறிக்கையை நபார்டு அதிகாரிகள் மாவட்ட ஆட்சியரிடம் அளிப்பார்கள்.

ரூ. 2,994 கோடி கடன்: அத்திட்ட அறிக்கைபடி, அடுத்த நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பயிர்க்கடனாக ரூ. 782.84 கோடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மத்திய கால மற்றும் நீண்ட கால விவசாயக் கடனாக ரூ. 607.23 கோடி என, விவசாயத்துக்கு மட்டும் மொத்தம் ரூ. 1,390.07 கோடி கடன் வழங்க நபார்டு திட்டமிட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக விவசாயம் சாராத தொழில்களுக்கு ரூ. 791.04 கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதர முன்னுரிமைக் கடன்களான சிறுவியாபாரக் கடன், சேவை தொழில் கடன், வீட்டுக்கடன், வாகனக்கடன், கல்விக்கடன் உள்ளிட்டவைகள் அடிப்படையில் ரூ. 813.54 கோடி வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் அடுத்த நிதியாண்டில் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத கடன் என மொத்தம் ரூ. 2,994.65 கோடி கடன் வழங்க நபார்ட் திட்டமிட்டுள்ளது.

ஒன்றிய அளவில் வங்கியாளர்கள் கூட்டம்: இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில் ஒன்றியங்கள் அளவில் வங்கியாளர்கள் கூட்டம் விரைவில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் ஒவ்வொரு ஒன்றிய அளவில் எந்த அளவுக்கு கடன் வழங்க சாத்தியம் உள்ளது என்பது குறித்து ஆய்வு நடத்தப்படும். இவ்வாறு 13 ஒன்றியங்களிலும் வங்கியாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டு, நபார்டு நிர்ணயித்துள்ள கடன் திட்டத்தில் எந்த அளவுக்கு சாத்தியம் உள்ளது என்பது முடிவு செய்யப்படும்.

இது குறித்து வங்கி உயர் அதிகாரி ஒருவர் கூறியது: வரும் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ. 2,994 கோடி கடன் வழங்க சாத்தியம் உள்ளதாக நபார்டு திட்டமிட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் (2012-2013) ரூ. 2,351.20 கோடி கடன் வழங்கலாம் என்று நபார்டு திட்டமிட்டது. இதைத் தொடர்ந்து ஒன்றியங்கள் அளவில் நடந்த வங்கியாளர்கள் கூட்டத்தில், நபார்டு திட்டமிட்டதில் 95 சதவீதமான ரூ. 2,132.29 கோடி கடன் வழங்க சாத்தியம் உள்ளது என்று முடிவு செய்யப்பட்டது.

அதை 2 காலத்திட்டங்களாக பிரித்து முதல் 6 மாதத்தில் அதாவது செப்டம்பர் 2012 வரை ரூ. 1,087.28 கோடி கடன் வழங்கலாம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அந்த காலக்கட்டத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட அளவைவிட ரூ. 5.74 கோடி கூடுதலாக ரூ. 1,093.02 கோடி அளவுக்கு

கடன் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த 6 மாதத்தில் வழங்கப்பட்ட கடன் அளவு வரும் 2013, மார்ச் 31-க்கு பிறகுதான் தெரியும் என்றார் அவர்.

## திருந்திய நெல் சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல்

திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் கடைபிடித்தால் 25 சதவீதம் கூடுதல் மகசூல் பெற முடியும் என்று, திருக்கோவிலூர் அருகே சித்தப்பட்டினம் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வயல் தின விழாவில் தெரிவிக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு ஆத்மா திட்டத் தலைவர் கங்காதரன் தலைமை தாங்கினார். நீர்ப் பாசன சங்கத் தலைவர் தங்க.பிரகாஷ், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலர் முனியன் முன்னிலை வகித்தனர். துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி வரவேற்றார்.

வேளாண் உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் பேசியதாவது: சம்பா பருவத்தில் மணலூர்பேட்டை பகுதியில் சித்தப்பட்டினம், சொரையப்பட்டு, விளந்தை போன்ற கிராமங்களில் சுமார் 400 ஏக்கர் பரப்பளவில் வேளாண்மை உதவி அலுவலர்கள் மூலம் திருந்திய நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருந்திய நெல் சாகுபடியில் விதைகள், நாற்றாங்கால் செலவினங்கள், தொழிலாளர் செலவினங்கள் போன்ற இனங்களில் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2000 முதல் ரூ.2500 வரை செலவு ஆகிறது.

இளவயது நாற்றுகள் வரிசை வரிசையாக நடப்படுவதால், பயிர்களுக்கு போதிய சூரிய வெளிச்சம் கிடைக்கிறது. இதனால் பூச்சி நோய் தாக்குதல் குறைகிறது. பாசன நீர்த்தேவை 35 முதல் 40 சதம் வரை குறைகிறது.

பயிர்கள் நன்கு கிளைத்து ஒவ்வொரு தூரிலும் 35 முதல் 50 கதிர்கள் கிடைக்கின்றன. மணிகள் எடை அதிகரித்து விவசாயிகளுக்கு மகசூல் 25 சதம் அதிகரித்துள்ளது. திருந்திய நெல் சாகுபடியில் மகசூல் அதிகரிப்பதை மற்ற விவசாயிகள் அறிந்து அதிக அளவில் திருந்திய நெல் சாகுபடி முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கில் இதுபோன்ற வயல் தின விழாக்கள் நடத்தப்படுகிறது. வயல் தின விழாவில் திருந்திய நெல் சாகுபடி உயர் விளைச்சல் எடுத்த விவசாயிகள் தங்களது அனுபவங்களை பகிர்வதால் பிற விவசாயிகளுக்கு பயனாக அமையும் என்றார். விழாவில் கலந்துகொண்ட 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் குழுக்களுக்கு விசைத் தெளிப்பான், பவர் வீடர்கள், நுண்ணுரங்கள் வழங்கப்பட்டன. உதவி

வேளாண்மை அலுவலர்கள் சிவக்குமார், செந்தில், சிவநேசன், வெங்கடகிருஷ்ணன், திருமலை, கிடங்கு மேலாளர் ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## பருவமழை பொய்த்ததால் திராட்சை விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை

ஆண்டிபட்டி பகுதியில் பருவமழை பொய்த்தால், திராட்சைப் பழங்களில் நோய் தாக்குதல் ஏற்பட்டு விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஆண்டிபட்டி பகுதியில் ராஜதானி, தெப்பம்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களில் விவசாயிகள் சுமார் 100 ஏக்கருக்கும் மேல் பன்னீர் திராட்சை பயிர் செய்துள்ளனர். தற்போது, திராட்சைகள் முதிர்ந்த நிலையில் அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

ஆனால், கடந்த 6 மாதங்களாக மழை இல்லாததால், நோய்த் தாக்குதலுக்கு உள்ளான திராட்சை பழங்கள், அழுகியும், சிறுத்தும் உதிர்ந்துவிட்டன. இதனால், திராட்சை விவசாயிகள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளனர்.

இதனிடையே, அறுவடை செய்யப்பட்ட திராட்சை கடந்த மாதம் 10 கிலோ கொண்ட பெட்டி 350 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, பழத்தின் அளவு குறைந்துள்ளதால், 10 கிலோ கொண்ட பெட்டி ரூ. 230 வரை விலை போகிறது. இது, உற்பத்திச் செலவுக்குக் கூட கட்டுபடியாகாத விலை என்கின்றனர் விவசாயிகள்.

இது குறித்து விவசாயி ஈஸ்வரி கூறியது: கடந்த மாதங்களில் விலை சுமாராகக் கிடைத்தது. தற்போது, பழம் சிறியதாக இருப்பதால், விலை குறைவாகக் கிடைக்கின்றது. மேலும், தற்போதுள்ள மின்சாரத் தட்டுப்பாடு, உரங்களின் விலை ஏற்றம் மற்றும் கூலி ஆள்கள் சம்பள உயர்வு ஆகிய காரணத்தால், உற்பத்தி செலவுக்கானப் பணம் கூட கிடைக்காத நிலை உள்ளது. எனவே, விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கல்

வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு ரூ.23,81,090 மதிப்பிலான வேளாண் கருவிகளை மானிய விலையில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் வழங்கினார்.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 5 ஆதிதிராவிட விவசாயிகளுக்கும், 5 இதர விவசாயிகளுக்கும் ரூ.23,81,090 மதிப்பிலான மினி டிராக்டர், பவர் வீடர், பவர் டில்லர் ஆகிய பண்ணைக் கருவிகள் ரூ.11,13,550 மானியத்தில் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் எம்.யுவராஜ், இளநிலைப் பொறியாளர் எம்.ராமர், வேளாண் துறை இணை இயக்குநர் சக்திமோகன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் இளங்கோவன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு ரூ.12.51 கோடி இழப்பு}ஆர்.வேல்முருகன்}

கோவை மாவட்டத்தில் நிலவும் வறட்சியால் பயிர்கள் காய்ந்து போனதால் விவசாயிகளுக்கு குறைந்தபட்சமாக ரூ.12.51 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு குறைந்து கொண்டே செல்கிறது. இந்த நிலையில் வறட்சியின் தாக்கத்தால் ஏற்படும் இழப்பும் விவசாயிகளை தாங்க முடியாத துயரத்துக்கு ஆளாக்கியுள்ளது.

தொழில் நகரான கோவை மாவட்டத்தில் மட்டும் சுமார் 2.25 லட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக சோளம், மக்காச்சோளம் உள்ளிட்ட சிறு பயிர்கள் 95 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படும். தோட்டக் கலைப் பயிர்கள் 85 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன.

கோவை மாவட்டத்தின் தொண்டாமுத்தூர், ஆனைமலை வட்டாரங்களில் நெல் பயிரிடப்படுகிறது. இதில் ஆனைமலை பகுதியின் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் தேவையான தண்ணீர் ஆழியாறு அணையில் இருந்து வழங்கப்படுகிறது. இது தவிர தொண்டாமுத்தூர் பகுதியில் சுமார் 375 ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில் வறட்சியால் 125 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் காய்ந்து விட்டன. ஓர் ஏக்கருக்கு விவசாயிகள் செய்த செலவு ரூ.3000 வீதம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.3.75 லட்சம்.

சோளம், மக்காச்சோளம் ஆகிய சிறு தானியங்கள் சுமார் 95 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு வந்தன. ஆனால் இந்த ஆண்டு 67 ஆயிரத்து 500 ஏக்கரில் மட்டும் பயிரிடப்பட்டுள்ளன. இதில் சுமார் 14 ஆயிரத்து 750 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த சிறு தானியங்கள் காய்ந்துவிட்டன. ஏக்கருக்கு ரூ.5000 வீதம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.7.38 கோடி.

பாசிப்பயறு, உளுந்து, தட்டை, துவரை ஆகிய பயறு வகைப் பயிர்கள் பொதுவாக 30 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்படும். ஆனால் இந்த ஆண்டு 22 ஆயிரத்து 500 ஏக்கரில் பயிரிடப்பட்டன. இதில் சுமார் 6500 ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் காய்ந்துவிட்டன. ஏக்கருக்கு ரூ.6000 வீதம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.3.90 கோடி.

எண்ணெய் வித்துப் பயிரான நிலக்கடலை 20 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்படும். இந்த ஆண்டு 12 ஆயிரத்து 500 ஏக்கரில் மட்டும் பயிரிடப்பட்டது. இதில் 1500 ஏக்கரில் பயிரிடப்பட்ட நிலக்கடலைப் பயிர்கள் காய்ந்துவிட்டன. ஏக்கருக்கு ரூ.8000 வீதம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.1.20 கோடி.

கோவை மாவட்டத்தில் நிலவும் வறட்சியால் பயிர்கள் காய்ந்ததில் இதுவரை ரூ.12.51 கோடி அளவுக்கு விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

வறட்சியால் காய்ந்து போன வாழ்நாள் பயிரான தென்னை குறித்த விவரங்களையும் அதிகாரிகள் தொகுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக வேளாண்மைத் துறையினரும் வருவாய்த் துறையினரும் தனித்தனியாக அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். நிவாரணம் குறித்த அறிவிப்பு சட்டப்பேரவையில் வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் எழுந்துள்ளது.

### பயிர்க் கடனை ரத்து செய்ய வலியுறுத்தல்

பயிர்க் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டக் குழுக் கூட்டம், மாவட்ட துணைத் தலைவர் ராஜகோபால் தலைமையில் பல்லடம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் மதுசூதனன், நிர்வாகிகள் வெங்கடாசலம், பாலதண்டபாணி, பழனிசாமி, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் பஞ்சலிங்கம் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: சராசரியான மழையைவிட குறைவாக மழை பெய்திருந்ததால், தமிழகத்தை வறட்சி மாநிலமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். திருப்பூர் மாவட்டத்தில் கடும் வறட்சியால் ஆழ்குழாய் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது.

நெல், மக்காச்சோளம்,தென்னை உள்ளிட்டவை காய்ந்துவிட்டன. கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு, விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. காய்ந்துபோன பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். பயிர்க் கடனை ரத்து செய்ய வேண்டும்; வங்கிகள் கடன் வசூலை கைவிட வேண்டும். மாவட்டத்தில் கோட்ட அளவில் 20 ஆண்டுகளாக விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்று வந்தது.

ஆனால் 2 மாதங்களாக மாவட்டத்தில் கோட்ட அளவிலான கூட்டம் நடைபெறவில்லை; இதனை நடத்த வேண்டும்.

வறட்சியால் விவசாயி தற்கொலை செய்துள்ளார். எனவே மாவட்ட நிர்வாகம் விவசாய அமைப்பு பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, விவசாயிகளுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டும்.

### ஈரோடு வந்தது மேட்டூர் அணை நீர்!

மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர், ஈரோடு மாவட்டத்தை வந்தடைந்தது.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் போதிய அளவு நீர் இல்லாததால் கரும்பு, நெல், மஞ்சள், வாழை உள்ளிட்ட பயிர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மாநகராட்சி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பேரூராட்சிகள், ஊராட்சிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவி வருகிறது.

நிலத்தடி நீர்மட்டமும் சில இடங்களில் 1,000 அடிக்கு கீழ் போய்விட்டது. இந் நிலையில், மேட்டூர் அணையில் இருந்து 3 நாள்கள் தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டது. இதையடுத்து திறக்கப்பட்ட நீர், அம்மாபேட்டை, பவானி வழியாக ஈரோட்டை செவ்வாய்க்கிழமை கடந்து சென்றது.

இதனால், வெண்டிப்பாளையம், பாசூர் நீர் மின் நிலைய தேக்கங்களில் அதிகளவு தண்ணீர் தேங்கி நின்றது. மேட்டூரில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### திருப்பூர் மாவட்ட வறட்சி நிலவரம்70 ஆயிரம் ஹெக்டரில் பயிர்கள் பாதிப்பு}கே.கே.மணிகண்டன் }

திருப்பூர் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் 70 ஆயிரத்து 206 ஹெக்டர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பல்வேறு வகையான பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வேளாண்மைத் துறை ஆய்வில் தெரியவந்துள்ளது.

2012-ஆம் ஆண்டில் தமிழகத்திலேயே திருப்பூர் மாவட்டத்தில் தான் மிகக் குறைந்த அளவாக 365.20 மி.மீ. மழை பெய்துள்ளது. இம்மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளின் சராசரி மழை அளவான 602.45 மி.மீ. மழையில் பாதி அளவு கூட இந்த முறை பெய்யவில்லை.

கடும் வறட்சியில் சிக்கியுள்ள இம்மாவட்டத்தில் தென்னை தவிர்த்து பிற பயிர்களின் மொத்த சாகுபடி பரப்பளவு என்பது ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 473 ஹெக்டர். ஆனால், கடந்த ஆண்டில் தெற்மேற்கு பருவ மழை காலத்தில் (காரீப்) 38 ஆயிரத்து 182 ஹெக்டர் பரப்பளவிலும், வட கிழக்கு பருவமழை காலத்தில் (ரபி) 38 ஆயிரத்து 154 ஹெக்டர் பரப்பளவிலுமாக 76 ஆயிரத்து 336 ஹெக்டர் பரப்பளவில் மட்டும் பல்வேறு வகையான பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன.

இதில் வறட்சியால் 60 ஆயிரத்து 984 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் 50 சதவீதத்துக்கும் அதிகமாக பாதிக்கப்பட்டன. (பாதிக்கப்பட்ட விவசாயிகள் எண்ணிக்கை 71,507).

அதேசமயம் 50 சதவீதத்துக்கும் குறைவான பாதிப்புக்குள்ளான விவசாய நிலங்கள் 9 ஆயிரத்து 222 ஹெக்டர் (பாதிக்கப்பட்ட விவசாயிகள் 11,397 பேர்) எனவும், 6 ஆயிரத்து 130 ஹெக்டர் பரப்பளவில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் வேளாண்மைத் துறை கணக்கிட்டுள்ளது.

நெல் சாகுபடி 81 ஹெக்டரில் மட்டும்: ஆண்டுதோறும் 11 ஆயிரத்து 440 ஹெக்டரில் மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். ஆனால் கடந்தாண்டில் சம்பா சாகுபடியில் 81 ஹெக்டர் பரப்பளவில் மட்டும் நெல் சாகுபடி செய்யப்பட்டு, விளைச்சல் பாதிப்பு 50 சதவீதத்துக்கும் கீழாக இருந்தது.

சோளப் பயிர்கள்: 66 ஆயிரத்து 430 ஹெக்டரில் சோளம், மக்காச்சோளம் பயிரிடப்படும் நிலையில், கடந்தாண்டில் 48 ஆயிரத்து 177 ஹெக்டரில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டது. அதில், 42 ஆயிரத்து 207 ஹெக்டர் பரப்பளவில் 50 சதவீதத்துக்கும் அதிகமாக பாதிப்பு ஏற்பட்டது. 5 ஆயிரத்து 153 ஹெக்டரில் 50 சதவீதத்துக்கும் கீழ் பாதிப்பு இருந்தது. 817 ஹெக்டரில் பாதிப்பு ஏற்படவில்லை.

பயறு வகைகள்: 19, 321 ஹெக்டரில் சாகுபடி செய்யப்படும் பயறு வகைகள், கடந்தாண்டில் 16,567 ஹெக்டரில் மட்டும் பயிரிடப்பட்டன. அதில், 13, 331 ஹெக்டரில் 50 சதவீதத்துக்கும் அதிமாக விளைச்சல் பாதிக்கப்பட்டது. 3,236 ஹெக்டரில் பாதிப்பு இல்லை.

எண்ணெய்வித்துப் பயிர்கள்: தென்னை தவிர்த்து பிற எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடி பரப்பளவான 10,508 ஹெக்டரில், கடந்த ஆண்டில் 5,589 ஹெக்டரில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டன. அதில், 260 ஹெக்டரில் மட்டும் விளைச்சல் பாதிக்கப்படவில்லை.

கரும்பு விளைச்சல்: 6 ஆயிரம் ஹெக்டரில் சாகுபடி செய்யப்படும் கரும்பு, கடந்தாண்டில் 5,532 ஹெக்டரில் மட்டும் நடைபெற்றது. 1,783 ஹெக்டரில் விளைச்சல் பாதிக்கப்படவில்லை. 3,749 ஹெக்டர் பரப்பளவில் 50 சதவீதத்துக்கும் கீழ் பாதிப்பு இருந்தது.

பருத்தி விளைச்சல்: 774 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் பருத்தி, கடந்தாண்டில் 390 ஹெக்டரில் மட்டும் நடைபெற்றது. இதில் 36 ஹெக்டரில் விளைச்சல் பாதிக்கப்படவில்லை. 117 ஹெக்டரில் 50 சதவீதத்துக்கும் கூடுதலான பாதிப்பும் இருந்தது.

தென்னை மரங்கள் நிலவரம்: வறட்சியால் பாதிக்கப்படும் தென்னை மரங்களில் தேங்காய் விளைச்சல் பாதிப்பு உடனடியாக தெரிய வாய்ப்பில்லை. அடுத்தடுத்த ஆண்டுகளில் இதன் பாதிப்பு தெரியவரும் என்று வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

2011-12-ஆம் ஆண்டு நிலவரம்: நெல் சாகுபடி 9,059 ஹெக்டர், மக்காச்சோளம், சோளம் உள்ளிட்ட தானிய வகைகள் 55,864 ஹெக்டர், பயறு வகைகள் 19,420 ஹெக்டர், எண்ணெய்வித்துப் பயறுகள் 7,209 ஹெக்டர், கரும்பு சாகுபடி 8,135 ஹெக்டர், பருத்தி 676 ஹெக்டர் என மொத்த சாகுபடி ஒரு லட்சத்து 363 ஹெக்டர் பரப்பளவாக இருந்தது.

கடந்தாண்டில் (2012-13) மொத்த சாகுபடி பரப்பளவு 76,336 ஹெக்டராக குறைந்துள்ளது. திருப்பூரை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தி வரும் நிலையில், பயிர்கள் பாதிப்பு குறித்து வேளாண்மைத் துறை ஆய்வு செய்து மாவட்ட நிர்வாகத்துக்கு அறிக்கை அனுப்பியுள்ளது.

### வீட்டுத் தோட்டங்களுக்கான மலர் நாற்றுகள் விற்பனை

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசனையொட்டி வீட்டுத் தோட்டங்களுக்கான மலர் நாற்றுகள் விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, உதகை அரசினர் தாவரவியல் பூங்கா உதவி இயக்குநர் டாக்டர் வி.ராம்சுந்தர் தெரிவித்துள்ளது:

நீலகிரி மாவட்டத்தில் வரும் கோடை விழாவை முன்னிட்டும், மலர்க் காட்சியில் அழகுத் தோட்டங்களுக்கான போட்டிகளுக்காகவும், வீட்டுத் தோட்டங்கள், தனியார் நிறுவனங்கள், விருந்தினர் விடுதிகள், ஓய்வு விடுதிகள், தனியார் பள்ளிகளுக்கான அழகு தோட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அழகுத் தோட்டங்களை இப்போதிருந்தே தயார் செய்து வைத்துக் கொள்வது சிறப்பானது.

ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் போட்டியில் பங்கேற்றுள்ள தோட்டங்களை வல்லுநர் குழு ஆய்வு செய்து சிறந்த தோட்டங்களை தேர்ந்தெடுப்பர். போட்டிகளை எதிர்நோக்கியும், அழகான தோட்டங்களை மேலும் அழகுபடுத்துவதற்காகவும், மலர் நாற்றுகளை நடவு செய்ய இதுவே

தகுந்த தருணம். உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் கோடை விழா, மலர்க்காட்சியை முன்னிட்டு மலர் நாற்றுகள் நடவுப் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

மாவட்டத்தில் உள்ள வீட்டுத் தோட்டங்களில் நடவு செய்வதற்காக சால்வியா, பென்சிடிமன், ஆப்ரிகன் மெரிகோல்டு, பிரெஞ்சு மெரிகோல்டு, கேலண்டுலா, ஆன்டிரைனம், பெட்டூனியா, பேன்சி, ஆஸ்டர், காரனேசன், டயான்தஸ், லேடீஸ் லேஸ், சப்னேரியா, கொடிஷியா, அஜிரேட்டம், ஹெலிஜீரைசம், ஜினியா, சலோசியா, அமரான்தஸ், கஷேனியா, லுபின், நெமிஷியா, ஸ்டாக்ஸ் போன்ற நாற்றுகள் நடவுக்கு தயார் நிலையில் உள்ளன.

மிக குறைந்த விலையாக ஒரு நாற்று ரூ.2 வீதம் விற்பனை செய்யப்படுகிறது. மலர் நாற்று தேவைகளுக்கு உடனடியாக உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## நவீன வேளாண் இயந்திரப் பயிற்சியில் சேர கிராமப்புற இளைஞர்களுக்கு அழைப்பு

கிராமப்புறத்தில் வசிக்கும் இளைஞர்களுக்கு நவீன வேளாண் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்த பயிற்சி வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதுகுறிதது ஆட்சியரின் செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்கள் 50 பேருக்கு நவீன வேளாண் இயந்திரங்களை இயக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சியில் பங்கேற்போருக்கு காலை, மாலை தேநீர், மதிய உணவு, ஊக்கத் தொகை மற்றும் பயிற்சி நிறைவின்போது உபகரணங்கள் வழங்கப்படும்.

பயிற்சி காலம் 3 மாதங்கள். இப்பயிற்சி வேலூரில் உள்ள அரசு இயந்திரக் கலப்பை பணிமனையில் வழங்கப்படும். பயிற்சியில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று 35 வயதுக்கு மிகாமல் உள்ள கிராமப்புற இளைஞர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

விருப்பமுள்ளோர், 0416-2266603, 2266684, 2267182, 9443969071, 9443209629 ஆகிய எண்களை தொடர்புகொள்ளலாம். பயிற்சிக்கு பிப்ரவரி 10-ம் தேதிக்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும். பயிற்சி பிப்ரவரி மாதம் 2-வது வாரத்தில் தொடங்கும்.

## விதை கிராம திட்டப் பயிற்சி

செங்கத்தை அடுத்த புதுப்பாளையம் வேளாண்மைத் துறை சார்பில் விதை கிராமத் திட்டம் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி கோ.புதுப்பட்டு கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் சாந்தி முனுசாமி தலைமை வகித்தார். ஒரவந்தவாடி ஊராட்சி மன்றத் தலைவர் பழனிராஜ் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் வெங்கடேசன் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் செல்லப்பாண்டியன், விதை கிராமத் திட்டத்தின் நோக்கம், அரசு வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி சிறப்புரையாற்றினார்.

## ராசிபுரத்தில் ரூ.55 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 3,700 மூட்டைகள் பருத்தி வரப்பெற்று, ரூ.55 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

ராசிபுரம் அருகேயுள்ள கவுண்டம்பாளையம் குடோனில் வாரம் தோறும் திங்கள்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் ஏராளமான விவசாயிகளும், வியாபாரிகளும் கலந்து கொள்வர்.

பட்டணம், முத்துகாளிப்பட்டி, கைலாசம்பாளையம், வேலம்பாளையம், கதிராநல்லூர், புதுச்சத்திரம், குருசாமிபாளையம், சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, ஜேடர்பாளையம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து விவசாயிகள் தங்களது பருத்தியை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதில், 2 ஆயிரத்து 900 ஆர்.சி.எச். ரக பருத்தி மூட்டைகளும், 800 டி.சி.எச். ரக பருத்தி மூட்டைகளும் என மொத்தம் 3 ஆயிரத்து 700 மூட்டைகள் ஏலத்திற்கு வந்திருந்தன.

டி.சி.எச். ரக பருத்தி குறைந்தபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.4 ஆயிரத்து 900 முதல் அதிகபட்சமாக ரூ.5 ஆயிரத்து 320-க்கு விலை போனது.

ஆர்.சி.எச். ரகம் குறைந்தபட்சமாக ரூ.3 ஆயிரத்து 900 முதல் அதிகபட்சமாக ரூ.4 ஆயிரத்து 395-க்கு விலை போனது.

இந்த வாரம் பருத்திக்கு நல்ல விலை கிடைத்ததாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்த வாரம் மட்டும் மொத்தம் ரூ.55 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம் நடைபெற்றது.

## டெல்டா பகுதி விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்கும்: ஓ.பன்னீர்செல்வம்



காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், உரிய நிவாரணம் கிடைக்கும் என்று நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேரவையில் உறுதியளித்தார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை ஆளுநர் உரை மீதான விவாதத்தில் தேமுதிக சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் (மேட்டூர்) பேசும்போது, காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ஆளுநர் உரையில் நிவாரணம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அளிக்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றார் அவர்.

அப்போது பேரவையில் நடந்த விவாதம்:

நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்: டெல்டா பகுதி விவசாயிகளைப் பற்றி உங்களைவிட அதிகம் கவலைப்படுபவர் முதல்வர் ஜெயலலிதா. விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரிய நிவாரணத்தை விரைவில் அறிவிப்பார்.

எஸ்.ஆர்.பார்த்திபன்: எங்கள் தலைவர் (விஜயகாந்த்) திரைப்படங்கள் மூலம் சம்பாதித்த பணத்தை உயிர் இழந்த டெல்டா விவசாயிகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் வழங்கினார்.

அமைச்சர் நத்தம் விஸ்வநாதன்: "தானே' புயலில் பாதிக்கப்பட்ட 6 பேருக்கு வேட்டி, சேலை வழங்கினார். 6 பேருக்கு உதையும் வழங்கினார்.

ஓ.பன்னீர்செல்வம்: திரைப்படங்களில் கோடி கோடியாக சம்பாதித்ததை வழங்குவதாக கூறுகிறார். ஆனால் சென்னை, மதுரையில் பொறியியல் கல்லூரிகளும், புதுச்சேரியில் மருத்துவக் கல்லூரியும் ஆரம்பித்துள்ளாரே தவிர விவசாயிகளுக்கு எதுவும் செய்யவில்லை.

வி.சி.சந்திரகுமார் (தேமுதிக): மதுரை, புதுச்சேரியில், விஜயகாந்த் கல்லூரி ஆரம்பித்ததாகக் கூறுகிறார். இதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கத் தயாரா?

அமைச்சர் நத்தம் விஸ்வநாதன்: சொல்லுகிற இடத்தில் இல்லை என்றால், இருக்கிற இடத்தில் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

எஸ்.ஆர்.பார்த்திபன்: டெல்டா பகுதி விவசாயிகளின் நிலையை உயர்நிலைக் குழு ஆய்வு நடத்தி சுமார் 23 நாள்கள் கடந்துவிட்ட நிலையில், அந்த விவசாயிகள் அரசிடமிருந்து உதவிகள் கிடைக்காதா என்று ஏங்குகின்றனர். அந்த மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டிய அரசு காலம் கடத்துவதன் நோக்கம் என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஓ.பன்னீர்செல்வம்: உயர் நிலைக் குழுவினுடைய அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய நிவாரணத்தை உரிய நேரத்தில் முதல்வர் ஜெயலலிதா விரைவில் அறிவிப்பார் என்பது ஆளுநர் உரையிலேயே இருக்கிறது என்றார்.

**உடனடித் தேவை, தண்ணீர்!**

பிப்ரவரி 5, 2007-இல் காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு வெளியானது. செவ்வாய்க்கிழமையுடன் (5.2.2013) ஆறு ஆண்டுகள் நிறைவுற்றன. இன்னமும் இந்தத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடாமல் இருக்கிறது மத்திய அரசு.

டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவோம் என்று அரசு வழக்குரைஞர் நீதிமன்றத்தில் அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்பது மட்டுமல்ல, இன்னமும்கூட, "இரு தரப்பும் ஏற்கும் ஒரு தருணத்துக்காக அரசிதழில் வெளியிடாமல் இருப்பதாக' நீதிமன்றத்தில் மத்திய அரசின் வழக்குரைஞர் கூறுகிறார். அதை ஏற்க மறுத்த நீதிமன்றம், பிப்ரவரி 20-ஆம் தேதிக்குள் அரசிதழில் வெளியிட வேண்டும் என்று கெடு விதித்திருக்கிறது.

அண்மையில் தமிழகத்தில், தஞ்சைப் பகுதியில் பேசிய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியாகும் என்றார். இப்போது நீதிமன்றம் பிப்ரவரி 20-க்குள் வெளியிடப்பட வேண்டும் என்கிறது. பிப்ரவரி மாதத்துடன் "சம்பா' விவசாயம் முடிந்து போய்விடும். அதன் பிறகு தண்ணீர் பேச்சு பற்றிய காரசார விவாதங்கள் அடுத்த "குறுவை'ச் சாகுபடியின்போதுதான் மீண்டும் எழும்.

அரசிதழில் வெளியாவதைக் காட்டிலும் இன்றைய அவசியத் தேவை - 3 லட்சம் ஏக்கர் நெற்பயிரைக் காப்பதுதான். மொத்தம் 9 லட்சம் ஏக்கரில் பயிரிட்டனர். 3 லட்சம் ஏக்கரில் பயிர், நீர் இல்லாமல் கருகிவிட்டது. 3 லட்சம் ஏக்கரில் சாகுபடி முடிந்துவிட்டது. இப்போது அறுவடைக்கு காத்து நிற்கும் 3 லட்சம் ஏக்கருக்கு உடனடியாகத் தண்ணீர் தேவை.

காவிரி நீரைத் திறந்துவிடக் கர்நாடகம் மறுக்கிறது என்று நீதிமன்றம் போனால், "முதலில் மேட்டூர் அணையிலிருந்து 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடுங்கள், பிறகு இதற்கு ஈடான நீரைத் தமிழகத்துக்குக் கர்நாடகம் வழங்கும்' என்று நீதிபதிகள் கூறுகின்றனர்.

தமிழ்நாடு மேட்டூர் அணையில் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொண்டு தமிழக விவசாயிகளை வஞ்சிக்குமா? அணையில் போதுமான தண்ணீர் இருந்தால் "சம்பா' பயிர்களை வாடும்படியாக

விட்டுவைக்குமா? மேட்டூர் அணையில் இப்போதுள்ள நீர் உயரம் வெறும் 34 அடி மட்டுமே. அதாவது ஏறக்குறைய 9 டி.எம்.சி. தண்ணீர்தான் அணையில் இருப்பு.

இதேவேளையில், கர்நாடகத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகர், ஹேமாவதி உள்ளிட்ட அணைகளில் உள்ள மொத்த நீர் இருப்பு 20 டி.எம்.சி. அதாவது, காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பின்படி, காவிரிநீர்ப் பங்கீட்டில் 58% (ஆண்டுக்கு 419 டிஎம்சி) உரிமை உடைய தமிழ்நாட்டின் அணை நீர் இருப்பு 9 டி.எம்.சி.; 37% (ஆண்டுக்கு 270 டிஎம்சி) உரிமை உடைய கர்நாடக அணைகளில் தண்ணீர் இருப்பு 20 டி.எம்.சி.. இதைப் பார்த்தாலே பாமரன்கூட, யாரை யார் ஏமாற்றி நீரைச் சேமித்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறிவான். ஆனால், நீதிமன்றம் கர்நாடகம் சொல்லும் வாதத்தை சரிபார்க்க, அதாவது தமிழ்நாட்டில் 40% அறுவடை முடிந்துவிட்டது, மீதியுள்ள பயிர்கள் அறுவடைக்குத் தயாராக இருப்பதால் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தேவையில்லை என்று கர்நாடகம் கூறுவதை ஆய்வு செய்ய, ஒரு குழுவைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி அறிக்கை தர வேண்டும் என்று உத்தரவிடுகின்றது.

அதாவது திங்கள்கிழமை நீதிமன்றம் உத்தரவிடுகிறது. "செவ்வாய்க்கிழமை குழு ஆய்வு செய்யும், புதன்கிழமை அறிக்கை தாக்கல் செய்யும்' என்று. "ஹெலிகாப்டரில் சென்றாகிலும் ஆய்வு நடத்துங்கள்' என்று நீதிமன்றம் கூறுகிறது. தமிழகத்தின் சம்பா சாகுபடிக்குத் தேவையான நீரின் அளவு குறித்து ஆராய மத்திய நீர் ஆணையத்தின் மூவர் குழு உடனடியாகக் காரில் பயணம் செய்யத் தொடங்கிவிட்டது. இவர்கள் ஒருநாளில் எத்தகைய ஆய்வை நடத்திவிட முடியும்?

தமிழக அரசும் நீதிமன்றத்தின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு, அதே நாள் இரவிலேயே வினாடிக்கு 9,000 கனஅடி நீரைத் திறந்துவிடத் தொடங்கிவிட்டது. வினாடிக்கு 9,000 கன அடி என்பது ஏறக்குறைய ஒரு நாளைக்கு 0.8 டி.எம்.சி. என கணக்கிடலாம். இரண்டரை நாளில் மேட்டூர் அணையிலிருந்து, நீதிமன்றம் கூறியுள்ள 2 டி.எம்.சி. தண்ணீர் வெளியேற்றப்பட்டுவிடும். அணையில் அடிமட்ட வண்டலுடன் கூடிய இந்த நீர், காவிரியில் ஆங்காங்கே உள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கே போதாது. ஆனால் நீதிமன்றம் இந்தக் குடிநீர் அளவைக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

கர்நாடகம் இதற்கு ஈடான தண்ணீரைத் திறந்துவிடும் என்று மட்டுமே நீதிமன்றம் கூறியுள்ளது. உடனடியாகத் திறக்க வேண்டும் என்று கூறவில்லை. நல்ல நாளிலேயே கர்நாடகம் ரொம்ப நியாயமாக நடந்துகொள்ளும்! நீதிமன்றம் சரியாக வரையறை செய்யாத நிலையில், கர்நாடகம் இந்த நீரைத் திறக்கப் போவதில்லை. அதாவது 20 டி.எம்.சி. இருப்பில் வைத்துள்ள கர்நாடகம், தமிழ்நாட்டுக்குக் கருணை காட்டப்போவதில்லை. கர்நாடக சட்டப்பேரவை, காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக்கூடாது என்று ஒருமனதாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

தமிழகம் மேட்டூர் அணையிலிருக்கும் மொத்த நீரையும் வெளியேற்றிவிட்டு, பயிருக்கு மட்டுமல்ல, தவிக்கும் வாய்க்கும் தண்ணீர் இல்லாமல் திண்டாடப் போகிறது.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பார்கள். நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவதைவிட முக்கியமும் அவசரமுமான ஒன்று உடனடியாகக் கர்நாடகம் தண்ணீரைத் திறந்து விடுவது!

இன்றைய வேளாண் செய்திகள்

06.02.2013 A.M

### செவ்வந்தி பூ விலை குறைவால் விவசாயிகள் விளைச்சல் இருந்தும் வேதனை

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் செவ்வந்தி பூக்கள் விளைச்சல் இருந்தும் விலை இல்லாததால், விவசாயிகள் வேதனையில் தவிக்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைரோடு, செம்பட்டி, ஏ.வெள்ளோடு, வடமதுரை, சாணர்பட்டி உட்பட பல இடங்களில் செவ்வந்தி பூக்கள் விளைகின்றன. இவை அனைத்தும் திண்டுக்கல் பூ மார்க்கெட்டிற்கு விவசாயிகளால் கொண்டு வரப்பட்டு, திருச்சி, பெரம்பலூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், சேலத்திற்கு வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.

அதிகம்: திண்டுக்கல் மாவட்டத்தில் இந்தாண்டு செவ்வந்தி பூ விளைச்சல் அதிகமாக உள்ளது. இதனால் பூ மார்க்கெட்டிற்கு அதிகளவு செவ்வந்தி பூக்கள் வரத்து உள்ளது. நேற்று கிலோ ரூ.3 முதல் ரூ.5 வரைக்கும் விற்கப்பட்டது. (கடந்த மாதம் கிலோ ரூபாய் 20), இதையும் வாங்க வியாபாரிகள் முன்வராததால், விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டது.

பூ விவசாயி ஒருவர் கூறியதாவது: இந்தாண்டு மழை குறைவாக இருப்பதால், செவ்வந்தி பூக்கள் விளைச்சல் அதிகமாக உள்ளது. பூ மார்க்கெட்டிற்கு வரத்து அதிகமாக இருப்பதால், விலை இல்லாமல் போனது. காலையில் கிலோ ரூ.5க்கு விற்பனையானது. மாலையில் கிலோ ரூ.3க்கு குறைந்தது. களையெடுப்பு, பூச்சி மருந்து தெளித்தது, பராமரிப்பு கூலி கூட கிடைக்கவில்லை. இம்மாதம் குறிப்பிடும் வகையில் விசேஷங்கள் ல்லாமல் போனதால், வியாபாரிகள் செவ்வந்தியை வாங்க தயக்கம் காட்டுகின்றனர்,' என்றார்.

### விளைச்சலும், விலையும் குறைவு ;விரக்தியில் புளி விவசாயிகள்

கூடலூர்:பருவமழை பொய்த்து புளி விளைச்சல் குறைந்த நிலையில், விலையும் குறைவாக இருப்பதால், விவசாயிகள் புலம்புகின்றனர்.தேனி மாவட்டத்தில், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியான கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் பகுதிகளில் புளி சாகுபடி அதிகம் உள்ளது. பருவ மழை குறிப்பிட்ட நேரத்தில் இல்லாததால், புளி விளைச்சல் வெகுவாக குறைந்தது. தற்போது, சீசன் துவங்கி புளி வரத்து அதிகமாக உள்ள நேரம். கூடலூர் மார்கெட்டில், தினசரி 20

ஆயிரம் கிலோவிற்கும் மேல் வரத்து இருந்த நிலையில், தற்போது 5 ஆயிரம் கிலோ கூட வருவதில்லை. விலையும் குறைவு: வரத்து குறைவாக இருந்த போதிலும், விலையாவது அதிகமாக இருக்கும், என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், விலையும் குவிண்டாலுக்கு 2,200 ரூபாய்க்கு விற்கிறது.

கடந்த ஆண்டு சீசன் துவக்கத்தில், 4 ஆயிரம் ரூபாய் வரை விலை இருந்த நிலையில், படிப்படியாக விலை குறைந்தது. இந்த ஆண்டு சீசன் துவக்கத்திலேயே, 2,200 ரூபாய்க்கு விலை போவதால், போகப்போக விலை கடுமையாக குறையும் வாய்ப்பு உள்ளது.

### விளைந்த நெல்லும் வீடு வந்து சேரல ;கடன்பட்ட விவசாயிகள் புலம்பல்

ஆர்.எஸ்.மங்கலம்:வாங்கிய கடனை அடைப்பதற்காக, போதிய மழையின்றி அரைகுறையாக விளைந்த நெல்லையும் வீட்டிற்கு கொண்டு செல்லாமல், நிலத்திலேயே விற்கும் கொடுமையை, என்னவென்று சொல்வது என, ஆர்.எஸ்.மங்கலம் விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தின் நெல் களஞ்சியமான திருவாடானை தாலுகாவில் பருவமழையை நம்பி 39 ஆயிரத்து 590 எக்டேரில் நெல் விதைப்பு செய்யப்பட்டது. மழை பெய்யாததால் தமிழகத்தின் இரண்டாவது கண்மாயான பெரிய கண்மாய் உள்பட தாலுகாவில் 200க்கும் மேற்பட்ட கண்மாய்களும் , நீர் நிலைகளும் வறன்டன. தினமும் வானத்தை பார்த்தே காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றாமே மிஞ்சியது. ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துவிட்ட நிலையில், வாங்கிய கடனை அடைப்பதற்கு அறுவடை செய்த நெல்லை களத்திலும், வயல் வெளிகளிலுமே வியாபாரிகள் வாங்கிவருவதால் அங்கேயே விற்றுவருகின்றனர்.

இதுகுறித்து ஆனந்தூர் விவசாயிகள் இப்ராகிம், மாணிக்கம் கூறியதாவது: அரை குறையாக விளைந்த( ஏக்கருக்கு 2 முதல் 5 மூடைகள்)நெல்லையாவது வீடு கொண்டுவந்து சேர்ப்போம் என்றால், அதற்கும் வழியில்லை.< உரம், பூச்சிமருந்து <உட்பட இடுபொருட்கள் வாங்குவதற்கு அந்தந்த பகுதியில் உள்ள கமிஷன் கடை மற்றும் வட்டிக்கடைகாரர்களிடம் கடன் வாங்கியிருந்தோம். கொடுத்த வாக்கை காப்பாற்றினால் தான் அடுத்து உதவி செய்வர். அதனால் அறுவடை செய்த நெல்லை, நிலத்திலேயே விற்று, கடனை அடைத்து வருகிறோம், என்றனர்.

### சேதமாகும் பயிர்கள் நஷ்ட ஈடு தாமதத்தால் விவசாயிகள் பாதிப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர்:வனவிலங்குகளால் பாதிக்கப்படும் விவசாயிகள், நஷ்ட ஈடு கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தால், மிகுந்த பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.கடந்த சில மாதங்களாக

ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, ராஜபாளையம் பகுதிகளில் வறட்சி உள்ளது. வனப்பகுதி மான், யானை, காட்டுமாடு, காட்டு பன்றி, மிளா போன்றவைகள், வனத்தை விட்டு வெளியேறி, தனியார் விளைநிலங்களுக்குள் புகுந்து,சேதத்தை விளைவித்து வருகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள், வனத்துறையினருக்கு தகவல் கொடுத்து, நஷ்ட ஈடு கேட்டு விண்ணப்பிக்கின்றனர். வனத்துறையினர் பார்வையிட்ட பின், விளைவிக்கப்பட்ட பயிர், பாதிக்கப்பட்ட பரப்பு போன்றவற்றை, வருவாய்த்துறையினர் ஆய்வு செய்து சான்றளிப்பர். பின் தோட்டக்கலை, வேளாண்மை துறையினர் ஆய்வு செய்து, பயிர்களின் சேதத்தின் தன்மை பற்றி சான்றளிக்கின்றனர். அதன் பின்,வனத்துறையினர் நஷ்ட ஈடு வழங்குகின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள்,வருவாய்த்துறையினரிடம் சான்று பெறுவதற்காக பல நாட்கள் அலைய வேண்டியதுள்ளது. அதன் பின், வேளாண்மை துறையின் சான்று பெற்று நஷ்ட ஈடு கிடைப்பதற்கு, ஆறு மாதங்களுக்கு மேலாக காத்து கிடக்க வேண்டியதுள்ளது. விவசாயிகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.விவசாயி கண்ணன்,"" விலங்குகளால் ஏற்படும் நஷ்டத்தை பெறுவதற்கு பல மாதங்கள் அலைய வேண்டியதுள்ளது. விரைவில் நஷ்ட கிடைக்க, மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும்," என்றார்.

## விவசாய மானியம் வழங்கல்

தாராபுரம்: தாராபுரம் வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு, 2.87 லட்சம் ரூபாய் மதிப்பிலான விவசாய கருவிகள் வாங்க மானியம் வழங்கப்பட்டது.டிராக்டர் வாங்க, 1.25 லட்சம் ரூபாயும், பவர்வீடர் வாங்க, 22 ஆயிரம் ரூபாய் என விவசாய கருவிகள் வாங்க மானியம் வழங்கும் விழா, பொறியியல் துறை அலுவலகத்தில் நடந்தது.
உதவி செயற்பொறியாளர் ரங்போஜூ தலைமை வகித்தார். தகுதியான விவசாயிகளுக்கு, 2.87 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.இளநிலை பொறியாளர் விஜயன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## பனிப்பொழிவால் மல்பெரி விளைச்சல் அதிகரிப்பு பூச்சி தாக்குதல் இல்லாததால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு: ஈரோடு அடுத்த கவுந்தப்பாடியில், பட்டுப்புழுவுக்கு உணவாகும் மல்பெரியின் விளைச்சல் ஜோராக உள்ளதாக, விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.ஈரோடு மாவட்டத்தில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், மல்பரி ரகத்தினை நடவு செய்து, பட்டுப்பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். பட்டுப்பூச்சிகளை வளர்க்க முதல் பருவத்தில், 27 டிகிரி செல்சியஸ் வெப்பமும்,

85, முதல், 90 சதவீத ஈரப்பதமும் வேண்டும்.ஐந்து பருவங்கள் வரை வளர்க்கப்படும் பட்டுப்பூச்சிகளுக்கு குறிப்பிட்ட அளவு வெப்பமும், ஈரப்பதமும் வேண்டும். மல்பெரி இலைகளை மட்டுமே பட்டுப்பூச்சிகள் உணவாக உட்கொள்ளும். பட்டுப்பூச்சிகள் பொதுவாக, 25 முதல், 30 நாட்களுக்குள் முழு வளர்ச்சியடையும்.கடந்த ஆண்டில், மல்பெரி செடிகளில், மாவுப்பூச்சி தாக்குதல் அதிகமாக இருந்ததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்தாண்டு மல்பெரியில் மாவுப்பூச்சியில் தாக்குதல் இல்லாததால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.ஈரோடு மாவட்டம் பவானியை சேர்ந்த விவசாயி நல்லசாமி கூறியதாவது:ஈரோடு மாவட்டத்தில் போதிய விவசாயம் இல்லாததால், பட்டுப்புழு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். பட்டுப்பூச்சிகள் வளர்ப்பில் மிக கவனமாக ஈடுபட வேண்டும். ஈ, எறும்புகளால் மட்டுமே, பல்லாயிரக் கணக்கான முட்டைகளை அழியும் அபாயம் உள்ளதால், பாதுகாப்பான அறையில் வைத்து பட்டுப்புழுக்களை வளர்க்கிறோம்.கடந்த ஆண்டு மாவுப்பூச்சிகளின் தாக்குதலால், மல்பரி இலை உருமாறியும், சிறுத்தும், இலையின் மேற்பரப்பில் கரும்பூஞ்சானம் படர்ந்தும் மல்பெரி செடிகள் அழிந்ததால், விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர்.மழை, பனிக்காலத்தில், மல்பெரியில் மாவுப்பூச்சியின் தாக்குதல் குறைவாக இருக்கும். இந்தாண்டு ஜனவரி துவக்கம் முதலே, ஈரோடு மாவட்டத்தில் கடும் பனி நிலவுவதால், மாவுப்பூச்சியின் தாக்குதல் இல்லை. பட்டுப்புழு அதிகமாக கிடைக்க வாய்ப்புள்ளது.

பட்டு துணிகள் உற்பத்திக்கு மட்டுமே முன்பு, பூச்சியில் இருந்து பட்டு தயாரித்தனர். தற்போது, ஜவுளி, அலங்காரப்பொருள் தயாரிப்பு உட்பட பல விதமான பொருட்களுக்கும் பட்டு பயன்படுத்தப்படுவதால், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஆர்டர் அதிகம் வருவதால், பட்டுப்பூச்சி வளர்ப்பில் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.இந்நிலையில், இதுபோன்ற சீதோஷண நிலையும், பூச்சி தாக்குதல் இன்றி மல்பெரி செடிகள் வளர்ந்தால், ஈரோடு மாவட்டத்தில் பட்டு புழு வளர்ப்போர் மகிழ்ச்சி அடைவர், என்றார்.

## சொட்டு நீர் பாசன முகாம்களில் 495 விவசாயிகள் மனு உடனடி நடவடிக்கைக்கு ஆட்சியர் உத்தரவு

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடந்த சொட்டு நீர் பாசன சிறப்பு முகாம்களில், சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்த விருப்பம் தெரிவித்து, 495 பேர் மனு அளித்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, சொட்டு நீர்

பாசன திட்டத்தை அதிகமாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு சலுகைகள் கொண்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முகாம்கள்

சொட்டுநீர் பாசன திட்டம் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இம்முகாமில், சொட்டு நீர் பாசனத்தை செயல்படுத்த விரும்பும் விவசாயிகள் விண்ணப்பித்து, மானியத்துடன் கூடிய திட்டத்தை பெறலாம் என, மாவட்ட நிர்வாகம் அறிவித்துஇருந்தது.

இந்நிலையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடந்த சொட்டு நீர் பாசன சிறப்பு முகாம்களில், சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்த விருப்பம் தெரிவித்து, 495 பேர் மனு அளித்துள்ளனர்.

காஞ்சிபுரத்தில் 134, சித்தாமூரில் 160, திருக்கழுக்குன்றத்தில் 50, திருப்போரூரில் 65, மதுராந்தகத்தில் 58, உத்திரமேரூரில் 28, என, மொத்தம் 495 மனுக்கள் வரப்பெற்றுள்ளன.

இவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, உடனடியாக அவர்களின் நிலங்களில் சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்த, மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

தாமதம்

வருவாய் துறையினர் சிட்டா அடங்கல் வழங்க காலதாமதம் ஏற்படுத்துவதால், சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே, வருவாய் துறையினர் உடனடியாக, சிட்டா அடங்கல் வழங்க வேண்டும் என, தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துஉள்ளனர்.

## யானைகள் அட்டகாசம்விவசாயிகள் பெரும் பீதி

திருவண்ணாமலை: செங்கம் அருகே கிராமத்தில் புகுந்து யாØனைகள் அட்டகாசம் செய்து வருவதால், விவசாயிகள் பீதியடைந்துள்ளனர்.செங்கம் அடுத்த ஜவ்வாது மலை அடிவாரப்பகுதி கிராமமான முடியனூர், முத்தனூர் கிராமத்தில் ஜவ்வாது மலை காட்டுப்பகுதியிலிருந்து, ஒரு குட்டியானை உள்ளிட்ட ஏழு யானைகள் புகுந்தன. யானைகள் அங்கிருந்த விளை நிலத்தில் உள்ள கரும்பு, நெல், வாழை, போன்ற பயிர்களை நாசம் செய்தன, இதனால், அப்பகுதி விவசாயிகள் மற்றும் வனத்துறையினர் இணைந்து தாரை தப்பட்டை அடித்தும், வெடி, வெடித்தும், தீப்பந்தம் ஏற்றியும் யானைகளை மீண்டும் காட்டில் விரட்டியடித்தனர்.தொடர்ந்து யானைகள் அப்பகுதியில் விளை நிலங்களை நாசம் செய்யும் என்பதால், அப்பகுதி விவசாயிகள்

பீதியடைந்துள்ளனர். மேலும், தொடர்ந்து யானைகளை ஊருக்குள் வரவிடாமல் தடுக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## பருத்தி சாகுபடி செய்வதில் சங்கராபுரம் விவசாயிகள் ஆர்வம்

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் பருத்தி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சங்கராபுரம் அடுத்த அரசம்பட்டு, பாலப்பட்டு, மோட்டாம்பட்டி, வடபாலப்பட்டு, சோழம்பட்டு, லக்கினாய்கன்பட்டி, மூலக்காடு கிராமங்களில் விவசாயிகள் பருத்தி அதிக அளவில் சாகுபடி செய்துள்ளனர்.

அறுவடை செய்யப்பட்ட பருத்தியை சேலம்,ஆத்தூர் பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் நேரிடையாக வந்து வாங்கி செல்கின்றனர். குவிண்டால் 40,000 ரூபாயில் இருந்து 44,000 வரை வரை தற்போது விலை கிடைக்கிறது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பருத்தி விலை கூடுதலாக உள்ளதால் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மழையின்றி மகசூல் குறைந்தது விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு

தியாகதுருகம்:பருவமழை பொய்த்ததால் மானாவாரி நிலங்களில் மகசூல் குறைந்ததால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் பொய்த்ததால் கள்ளக்குறிச்சி பகுதியில் நீர்நிலைகள் நிரம்

பாமல் வறண்டு, நிலத்தடி நீர்மட்டமும் பாதிக்கப்

பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் கம்பு, பருத்தி, உளுந்து ஆகிய மானாவாரி பயிர் சாகுபடி மூலம் ஆண்டுதோறும் விவசாயிகள் பலனடைந்து வந்த நிலையில் கடந்த ஆண்டு மழை குறைந்ததால் மானாவாரியில் சாகுபடிசெய்த பயிர்கள் எதிர்பார்த்த பலனை தரவில்லை.

தென்மேற்கு பருவமழை துவங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் மானாவாரி கம்பு விதைப்பு பணிகளை குறித்த நேரத்தில் செய்யமுடியாமல் போனது. தொடர்ந்து எதிர்பார்த்த மழையும் கிடைக்காததால் கம்பு மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து ஆகஸ்ட் மாதத்தில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்ய விவசாயிகள் தயாராக இருந்த நிலையில் மழை ஏமாற்றியது. இதனால் குறித்த பருவத்தில் விதைப்பு பணிகளை

மேற்கொள்ளமுடியுமா என்ற சிக்கல் ஏற்பட்டது.

மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் கிடைத்த ஈரத்தை கொண்டு விதைப்பு பணிகளை முடித்தனர்.

அடுத்தடுத்து வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்தபடி பெய்யாததால் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு காய்கள் பிடிப்பதும் குறைந்தது.

இதனால் பருத்தி மகசூல் எதிர்பார்த்த அளவு கிடைக்காமல் விவசாயிகளை ஏமாற்றியது.

அதேபோல் கடந்த ஆண்டு மானாவாரி உளுந்து சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மிகப்பெரிய "அடி' விழுந்தது. மழை இன்றி செடிகளில் காய் முற்றும் முன்பே காய்ந்தது. மகசூல் பாதிக்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு எதிர்பார்த்த விலையும் உளுந்துக்கு கிடைக்கவில்லை.

இப்பகுதியில் உள்ள மானாவரி நிலங்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களாக உள்ள கம்பு, பருத்தி, உளுந்து ஆகியவை மழையின்றி மகசூல் குறைந்ததால், விவசாயிகளுக்கு கடும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

## திருக்கோவிலூர் கமிட்டியில் உளுந்து வரத்து திடீர் அதிகரிப்பு

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டிக்கு உளுந்து வரத்து அதிகரித்துள்ளது.

விளைச்சல் உயர்ந்தாலும், விலை குறையாததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருக்கோவிலூர் மற்றும்

சுற்றுவட்டார பகுதிகளில் வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால் மானாவாரி நிலங்கள் மட்டுமல்லாது, புஞ்சை நிலங்களிலும் உளுந்து பயிர் செய்யப் பட்டிருந்தது. விதைப்பு மற்றும் களைஎடுக்கும் நேரத்தில் லேசான தூறல்

இருந்ததால் பயிர்கள் செழித்து வளர்ந்தது.

தற்போது அறுவடை பணி நடந்து வருகிறது. மிதமான தட்பவெப்ப நிலை காரணமாக பூச்சி தாக்கம் இன்றி விளைச்சல் அபரிமிதமாக உள்ளது. ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் ஒரே நேரத்தில் உளுந்து பயிர் செய்யப்பட்டதால் விலை குறையும் என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் எழுந்தது.

நேற்று ஒரே நாளில் மட்டும் ஆயிரம் மூட்டைகள் உளுந்து ஏலத்திற்கு வந்தது. 100 கிலோ மூட்டை ஒன்று அதிகபட்சமாக 4,127 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 3,900 ரூபாய்க்கும் ஏலம் போனது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 100 ரூபாய் அதிகம்.

இன்னும் ஒருமாத காலத்திற்கு உளுந்து வரத்து இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர். இனி

வரும் நாட்களில் மேலும் வரத்து அதிகரிக்கும், என்றாலும் விலை குறைய வாய்ப்பில்லை. தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களில் உளுந்து விளைச்சல் குறைந்து போனதே, இதற்கு காரணம்.

### 1,071 மூட்டை மஞ்சள் குவிப்புரூ.45 லட்சத்துக்கு வர்த்தகம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 45 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. அதில், 18 தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிளில் உள்ள விவசாயிகள் சாகுபடி செய்துள்ள மஞ்சளை அறுவடை செய்து, விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.பல்வேறு மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து, மஞ்சளை வாங்கி செல்கின்றன. மேலும், தனியார் வியாபாரிகளும் மஞ்சளை வாங்கி, வெளிமாநிலம் மற்றும் நாடுகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். நேற்று நடந்த ஏலத்தில், 1,071 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது.விரலி ரகம் அதிகபட்சமாக ஒரு மூட்டை, 7,499, குறைந்தபட்சம், 5,099 ரூபாய்க்கும், குண்டு ரகம் அதிகபட்சம் ஒரு மூட்டை, 6,229, குறைந்தபட்சம், 4,299 ரூபாய்க்கும் விலை போனது. அதே போல், பனங்காலி அதிகபட்சம் ஒரு மூட்டை, 15 ஆயிரத்து, 599, குறைந்தபட்சம் பத்தாயிரத்து, 889 ரூபாய்க்கும் விற்பனையானது.நேற்று ஒரே நாளில், 45 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

### இறவை பருத்தி சாகுபடி குறித்து நாளை பயிற்சி

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை:வரும், 7ம் தேதி, "கோடை இறவை பருத்தி சாகுபடி' எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி நடக்கிறது. பயிற்சியில், மண் பரிசோதனை, பருத்தியில் உள்ள உயர் ரகம், பயிர் இடைவெளி, உயிர் மற்றும் ராசாயன உர நிர்வாகம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.பயிற்சியில், விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். பங்கேற்க விரும்புவோர், வரும், 6ம் தேதிக்குள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு, நேரில் வந்து பெயர் பதிவு செய்ய வேண்டும்.இல்லையெனில், 04286 - 266650, 266345, 266244 ஆகிய ஃபோன் எண்களில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன விலங்குகளிடம் இருந்து பயிர்களைகாக்க துணிகளை கட்டும் விவசாயிகள்

ஓசூர்: மலைக்கிராமங்களில் வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை காக்க விவசாயிகள் துணிகளை குச்சிகளில் கட்டி பறக்க விட்டு வருகின்றனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கால்நடை வளர்ப்பு தொழில் பிரதானமாக உள்ளது. குறிப்பாக வனப்பகுதிகளையொட்டிய ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் விவசாயிகள், காய்கறிகள், மலர்கள், கரும்பு, சோளம், ராகி, வாழை மற்றும் நெல் உள்ளிட்ட பல்வேறு விவசாய பயிர்களை, நவீன தொழில்நுட்டத்தில் அதிகளவு சாகுபடி செய்கின்றனர்.

குறிப்பாக இங்கு உற்பத்தியாகும் மலர்கள், காய்கறிகள், ராகி ஆகியவை உள்ளூர் தேவைக்கு போக வெளிநாடுகள், வடமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு தினசரி டன் கணக்கில் ஏற்றுமதியாகிறது.விவசாயத்தை நம்பி விவசாயிகள் மட்டுமின்றி, விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டாக வனப்பகுதிகளில் வறட்சியால் வனவிலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மலைக்கிராமங்களில் புகுந்து வருகின்றன.யானைகள், காட்டுப் பன்றிகள் அதிகளவு மலைக்கிராமங்களில் புகுந்து விவசாயிகளுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன. வனத்துறையினர், ஊழியர்கள் பற்றாக்குறை மற்றும் தொழில்நுட்ப கருவிகள் இல்லாமல் வனவிலங்குகள் காடுகளை விட்டு வெளியேறுவதை தடுக்க முடியாமல் திணறுகின்றனர்.வன விலங்குகளால் சேதமடையும், விவசாய பயிர்களுக்கு உடனுக்குடன் முழுமையான நிவாரணமும் வனத்துறையினர் வழங்குவதில்லை. அதனால், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் விவசாயிகள், தங்கள் விளைபயிர்களை காப்பாற்ற வயல்கள், தோட்டங்களை சுற்றிலும் யானைகள், காட்டுப்பன்றிகள் புகாமல் இருக்க வெள்ளை துணிகள், வெள்ளை சாக்குகளை கட்டி தொங்கவிட்டு தற்காப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 345 காசாக நிர்ணயம்

நாமக்கல்:தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 345 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு

கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். இதையடுத்து, 340 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள்

உயர்த்தி, 345 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.




நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 345, பெங்களூரு, 335, மைசூரு, 338, ஹைதராபாத், 323, மும்பை, 355, விஜயவாடா, 321, கோல்கட்டா, 375, பார்வாலா, 330, டில்லி, 345.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 45 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 82 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## விவசாயிகளின் கோரிக்கை நியாயமானதுதான்



திருவாரூர்: திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் ஆய்வு செய்த மத்திய குழுவினர் திருவாரூர் மாவட்டம் வடகால், கோவிலூர், சிங்களாந்தி ஆகிய இடங்களில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.அப்போது தமிழ்நாட்டிற்கு உடனடியாக 8 டிஎம்சி தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய குழுவினரிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.ஆய்வுக்கு பின் மத்திய வேளாண்துறை துணை கமிஷனர் பி.கே.ஷா கூறியதாவது:திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் சம்பா பயிர்களை பார்வையிட்டோம். ஒருசில பகுதியில் சாதாரண பாதிப்பும், சில பகுதிகளில் கடுமையான பாதிப்பும் தென்படுகிறது. தற்போது உள்ள நிலையில் உடனடியாக தண்ணீர் இருந்தால்தான் பயிர்களை காப்பாற்ற முடியும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். விவசாயிகளின் கோரிக்கை நியாய மானதுதான். திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட கலெக்டர்கள், வேளாண். அலுவலர்களுடன் ஆலோசித்து தற்போது எவ்வளவு தண்ணீர் இருந்தால் பயிர்களை காப்பாற்ற முடியும் என உச்ச நீதிமன்றத் தில் நாளை (இன்று) அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு மேட்டூர் நீர்மட்டம் 34 அடியாக குறைந்தது



மேட்டூர்: மேட்டூர் அணையிலிருந்து ஆண்டு தோறும் ஜூன் 12ம் தேதி முதல் ஜனவரி 28ம் தேதி வரை, காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். அணையின் நீர் இருப்பு மற்றும் பருவ மழையை எதிர்நோக்கி தண்ணீர் திறக்கப்படும். கடந்த ஆண்டில் பருவ மழை பொய்த்ததாலும், கர்நாடகம் தமிழகத்திற்கு தண்ணீர் விட மறுத்ததாலும், மேட்டூர் அணைக்கு நீர் இருப்பு போதிய அளவில் இல்லாமல் போனது.இதனால் குறுவை சாகுபடிக்கு ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. சம்பா சாகுபடிக்காக செப்டம்பர் 17ம் தேதி நீர் திறக்கப்பட்டது.நீர்வரத்து குறைந்த நிலையில், தொடர்ந்து அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் மற்றும் நீர் இருப்பு குறைந்தபட்ச அளவை தொட்டது. இதனால் வழக்கத்தை விட ஒரு மாதத்திற்கு முன்னதாக, கடந்த டிசம்பர் 22ம் தேதி நீர் திறப்பு நிறுத்தப்பட்டு, டிச.23 முதல் குடிநீர் தேவைக்காக மட்டும் 500 கனஅடி நீர் திறக்கப்பட்டது.

இந்நிலையில், டெல்டா பகுதிகளில் வாடும் பயிர்களை காப்பாற்ற வேண்டி, உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் மேட்டூர் அணையிலிருந்து 2 டிஎம்சி தண்ணீர் திறக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. அதன்படி, நேற்று முன்தினம் இரவு முதல் வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி நீர் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.இதனால் அணையின் நீர் மட்டம் மளமளவென குறையத் தொடங்கியுள்ளது. நேற்று முன்தினம் காலை 34.80 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 8 மணி நிலவரப்படி 34.04 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு 330 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால், நீர் இருப்பு இன்னும் ஓரிரு நாட்களில் 7.22 டிஎம்சியாக குறைந்துவிடும்.நீர் இருப்பு குறைந்து வருவதால், குடிநீர் பிரச்னையும் ஏற்படும் என்று

கூறப்படுகிறது. கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட்டால் மட்டுமே நிலைமையை ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வடமாநிலத்தில் தொடர் மழை கோதுமை விவசாயிகள் கவலை



சண்டிகார் : தமிழகத்தில் பயிர்கள் தண்ணீர் இன்றி வாடும் நிலையில், டெல்லி, அரியானா, பஞ்சாப் உள்ளிட்டவற்றில் கடந்த சில நாட்களாக கடுமையான சூறைக்காற்றுடன் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. கோதுமை பயிர் தற்போது முழுமையாக வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், அங்கு தேவையில்லாமல் பெய்து வரும் மழையால் பயிர்கள் மஞ்சள் நிறம் அடைய ஆரம்பித்துள்ளன.

இதனால் நிலங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று விவசாயிகளுக்கு நிபுணர்கள் அறிவுறுத்தி உள்ளனர். தொடர்ந்து மேலும் சில நாட்களுக்கு இதுபோல் மழை பெய்தால் கோதுமை பயிர் கடுமையாக பாதிக்கப்படும் நிலை உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். தொடர் மழையால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## வெங்காயம் விலை கிடுகிடு உயர்வு



புதுடெல்லி : வடமாநிலங்களில் வெங்காயத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. டெல்லியில் தற்போது 1 கிலோ வெங்காயம் ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனையாகிறது. கடந்த மாதத்தில் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனையான நிலையில் தற்போது 57 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. வெங்காயத்தை அதிகளவில் உற்பத்தி செய்யும் மாநிலம் மகாராஷ்டிரா. இம்மாநில அரசு சமீபத்தில் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தில், குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மீண்டும் விதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டிருந்தது.

உள்நாட்டு தேவை அதிகரித்ததால், ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்துக்கு குறைந்தபட்ச விலையை மத்திய அரசு நிர்ணயித்தது. இதனால் ஏற்றுமதி குறைந்து உள்நாட்டுக்கு தேவைக்கு வெங்காயம் வந்தது. இந்நிலையில், உற்பத்தி அதிகரித்ததை தொடர்ந்து 2012ம் ஆண்டு மே மாதம் குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு விலக்கியது. இதை மீண்டும் கொண்டு வரக்கூடாது என்று மகாராஷ்டிரா மாநில அரசு நிர்ப்பந்தித்து வருகிறது.

பாகிஸ்தானில் இருந்து ஒரு டன் வெங்காயம் ரூ.14,900க்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால், இந்தியாவில் இருந்து ஒரு டன் ரூ.23,900க்கு விற்கப்படுகிறது. இதனால் வெளிநாடுகள், பாகிஸ்தானில் இருந்துதான் வெங்காயத்தை இறக்குமதி செய்து வருகின்றன. எனவே, வெங்காயத்துக்கு குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நிர்ணயிக்கக் கூடாது என்று மகாராஷ்டிரா கூறியுள்ளது. தமிழகத்திலும் வெங்காயத்தின் விலை கிலோ ரூ.30 ஆக உயர்ந்துள்ளது.

## பண்ணை பயிர் மேலாண்மை திட்ட பணிகள் தீவிரம்

சிவகாசி, : பண்ணை பயிர் மேலாண்மை திட்டத்தில் விவசாயிகளுக்கு எஸ்எம்எஸ் மூலம் தகவல் அனுப்பும் திட்ட பணிகளை மார்ச்சுக்குள் முடிக்க அரசு உத்தரவிட்டுள்ளதால் பணிகள் தீவிரமடைந்துள்ளது.

தமிழக அரசு  விவசாயிகளுக்கு  பண்ணை பயிர் மேலாண்மை திடடத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.  இத்திட்டத்தல் மாநிலத்தில்  உள்ள அனைத்து விவசாயிகளின் பெயர், முகவரி, விவசாய நிலம், மண் தன்மை,  செல் நம்பர் போன்ற அனைத்து விவரங்களும் வேளாண்மை துறை இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு  வருகிறது.  ஒன்றிய வேளாண் உதவி அலுவலர்கள் மூலம் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. விவசாய பணியில் பசுமை புரட்சியை ஏறபடுத்தும் நோக்கில் அரசு இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் நிலத்தின் மண்ணின் தன்மையை பரிசோதித்து எநத மாதிரியான பயிர் சாகுபடி செய்யலாம். அதிக மகசூல் பெற என்ன உரங்கள் இட வேண்டும், மானய விதைகள் போன்ற  அனைத்து விவரங்களையும்,  வேளாண்மை துறையினர் உடனுக்குடன்  விவசாயிகளின் செல்போனுக்கு எஸஎம்எஸ மூலம் தெரிவிக்க  திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக  ஒன்றியம் வாரியாக விவசாயிகள் குறித்த தகவல்கள் வேளாண்மை துறை இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில்  இது வரை 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வரும் மாச்சுக்குள் இப்பணிகளை முழுமையாக முடிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு அடையாள அட்டையும் வழஙகப்படவுள்ளது.

இது குறித்து வேளாண்மை துறை அதகாரி ஒருவர் கூறுகையல், ‘பண்ணை பயர் மேலர்ண்மை திட்டத்தல் அனைத்து விவசாயிகளின விவரங்களும் வேளாண்மை துறை இணையதளத்தல் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த பணிகளை மார்ச்சுக்குள் முடிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தின மூலம் விவசாய சாகுபடி பணிகளை மேம்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகாக்க அரசு திட்டமிட்டுள்ளது’ என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

06.02.2013 A.M

## திருச்சி மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த பகுதியை மத்திய நிபுணர் குழுவினர் பார்வையிட்டனர் காவிரியில் தண்ணீர் இல்லாததால் நிலத் தடி நீர் குறைந்ததாக விவசாயிகள் புகார்

திருச்சி மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த பகுதியை மத்திய நிபுணர் குழுவினர் பார்வையிட்டனர். அப்போது அவர்களிடம் விவசாயிகள் காவிரியில் தண்ணீர் இல்லாததால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்த விட்டதாக புகார் கூறினார்கள்.

மத்திய நிபுணர் குழு வந்தது

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்ட நெற் பயிர்கள் கருகி வருவதால் காவிரியில் கர்நாடக அரசு உடனடியாக 12 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடவேண்டும் என கோரி தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து உள்ளது. இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் தமிழகத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் நிபுணர் குழுவை அனுப்பி நீர் தேவை மற்றும் பயிர்களின் நிலைமை பற்றி ஆராய்ந்து 2 நாட்களில் அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டனர்.

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் மத்திய வேளாண்மை துறை துணை ஆணையர் (பயிர்கள்) பி.கே ஷா தலைமையில் மத்திய நீர்வள துறை தலைமை பொறியாளர்கள் மகேந்திரன், ஜேக்கப், செய்பொறியாளர் தங்கமணி ஆகியோர் கொண்ட மத்திய நிபுணர் குழுவினர் நேற்று அதிகாலை திருச்சி வந்தனர். திருச்சி சுற்றுலா மாளிகையில் தங்கிய இந்த குழுவினர் நேற்று காலை சுமார் ஒன்றரை மணி நேரம் தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் ஸ்ரீதர், தமிழக வேளாண்மை துறை செயலாளர் சந்தீப் சக்சேனா, வேளாண்மை துறை ஆணையர் சிவதாஸ் மீனா, திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்கள். இந்த ஆலோசனையின்போது தமிழக அதிகாரிகள் தமிழகத்திற்கு காவிரி நீர் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், டெல்டா மாவட்டங்களில் கருகிய நிலையில் உள்ள நெற்பயிர்களின் நிலை பற்றி எடுத்துக்கூறினார்கள்.

வருவாய் ஆணையர் பேட்டி

இதனை தொடர்ந்து மத்திய நிபுணர்குழுவினரும், தமிழக அதிகாரிகளும் காவிரி டெல்டா மாவட்டங்களில் பயிர்களின் நிலைமையை அறிவதற்காக புறப்பட்டனர். அப்போது தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் ஸ்ரீதர் நிருபர்களிடம் கூறியதாவது:–

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி மத்திய வேளாண் துறை துணை கமிஷனர் ஷா தலைமையில் 4 பேர் கொண்ட குழுவினர் வந்து உள்ளனர். இந்த குழுவினர் திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கான நீர் தேவை, பயிர்களின் நிலைமை பற்றி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து புதன்கிழமை (இன்று) அறிக்கை தாக்கல் செய்வார்கள். டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்து விட்டு உடனடியாக டெல்லிக்கு புறப்பட்டு செல்வார்கள்.இவ்வாறு அவர் கூறினார்.

திருச்சியில் பார்வையிட்டனர்

மத்திய நிபுணர் குழுவினர் தஞ்சை செல்லும் வழியில் திருச்சி மாவட்டம் பாப்பாக்குறிச்சி என்ற இடத்தில் நடப்பட்டு கருகிய நிலையில் இருந்த நெற்பயிர்களை பார்வையிட்டனர். நிபுணர் குழுவினர் காரை விட்டு இறங்கியதும் விவசாயிகள் அவர்களை வயல்வெளிக்கு அழைத்துச்சென்றனர்.

பாப்பாக்குறிச்சி பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்து இருந்ததாகவும் கதிர் பிடிக்கும் நிலையில் உள்ள இந்த நேரத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகி வருவதாகவும், காவிரியில் உடனடியாக தண்ணீர் திறந்து விட்டால் தான் கருகும் பயிர்களை காப்பாற்ற முடியும் என்றும் முறையிட்டனர். மேலும் காவிரியில் தண்ணீர் இல்லாததால் திருச்சி மாவட்டத்தில் நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து விட்டதால் மின்சார மோட்டார் மூலமும் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றும் புகார் கூறினார்கள்.

விவசாயிகள் கூறிய புகார்கள் மற்றும் அவர்களது கோரிக்கைகளை மத்திய நிபுணர் குழுவினர் கவனமாக கேட்டனர். பின்னர் அவர்கள் கார் மூலம் தஞ்சை மாவட்டத்திற்கு புறப்பட்டு சென்றனர். அவர்களுடன் தமிழக அதிகாரிகள் குழுவினரும் சென்றனர்.

## விவசாயிகளுக்கு வழங்கிய பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை

விவசாயிகளுக்கு வழங்கிய பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும்

என்று தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

கூட்டம்

தமிழக விவசாயிகள் சங்க ஈரோடு மாவட்ட கூட்டம் ஈரோட்டில் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் டி.சுப்பு என்கிற முத்துசாமி, ஏ.பி.வேலுசாமி, பொருளாளர் எம்.லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

* தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து, மத்திய–மாநில அரசுகள் விவசாயிகளுக்கு வழங்கிய பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

* கீழ்பவானியில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்காததால் பாதிக்கப்பட்டு உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்.

சிலை

* வறட்சி காரணமாக தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதுடன், அவர்கள் பெற்றிருந்த கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

* கீழ்பவானி பாசனத்திட்டத்தை நிறுவிய தியாகி ஈஸ்வரனுக்கு கீழ்பவானி பாசனப்பகுதிகளில் பல்வேறு இடங்களிலும் உருவச்சிலை அமைக்க தமிழக அரசு அனுமதி அளிக்க வேண்டும். சிலை அமைக்க கூட்டு நடவடிக்கை ஒருங்கிணைப்பு குழு அமைப்பது.

பாராட்டு

* பத்மஸ்ரீ விருதினை சமூக சேவைக்காக பெற்றிருக்கும் தொழில் அதிபர் எஸ்கேஎம்.மயிலானந்தனுக்கு பாராட்டு தெரிவிப்பது.

மேற்கண்டவை உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் லோகுசாமி உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.